Former Language Pandits.

* 180 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government have granted Selection Grade Scale of Pay to the erstwhile Language Pandits (Hindi and Sanskrit) now working as B.T. Assistants and Secondary Grade Teachers;

(b) whether this benefit is denied to such of the Pandits as are working as Librarians, Junior Assistants, Attenders, etc., in various schools in the State; and

(c) if so, the reason therefor?

முன்னாள் மொழி ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் திரு. (கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னர், இந்தி ஆசிரியர்களாகவும், சமஸ்கிருத ஆசிரியர்களாகவும் இருந்து, தற்போது பி. டி. (B.T.) ஆசிரியர்களாகவும் இடைநிலை ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருபவர்களுக்கு, அரசு தேர்வுத்தர சம்பள வீதம் வழங்கியுள்ளது உண்மையா ?

(இ) அவ்வாறு மொழி ஆசிரியர்களாக இருந்து இம்மாநிலத்தின் பல்வேறு பள்ளிகளில் நூலகர்களாகவும், இளநிலை உதவியாளர்களாகவும் சிற்றெழுத்தர்களாகவும் தற்போது பணியாற்றி வருபவர்களுக்கு இச்சலுகை மறுக்கப்படுவது உண்மையா ?

(உ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பி. டி. ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் பதவிகளுக்கு தேர்வு நிலை பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பி.டி. ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற முன்னாள் இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் அப்பதவிக்கு அமர்த்தப்பட்டு தேர்வுநிலையும் பெறுகின்றனர். நூலகர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகிய பதவிகளுக்கு தேர்வு நிலை பதவிகள் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் ஆசிரியர் பணிக்கு தகுதி இல்லாத காரணத்தால் நூலகர், இளநிலை உதவியாளர் பதவிகளில் அமர்த்தப்பட்ட முன்னாள் இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் தேர்வு நிலை பெற முடியவில்லை.

1978 மார்ச் 20]

திரு. பி. ஆர். தாமஸ்: மொழியாசிரியர்களுக்கு அளிக்கப் பட்ட பாதுகாப்பின் அடிப்படையில் இந்த இரண்டாவது பிரிவினருக்கும் தேர்வு நிலை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, ஒரே ஊதிய விகிதத்தில் இரண்டு பணிகளை ஆற்றியவர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும் என்று ஆணை இருக்கிறது. ஆனால் கைத்தொழில் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு, அடுத்து இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றும்போது, இந்த இரண்டு பணிகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளாத காரணத்தால், அவர்களுக்குத் தேர்வு நிலை மறுக்கப்படுகிறது. எனவே இந்த இரண்டு நிலைமைகளையும் ஆராய்ந்து நல்ல முடிவை எடுப்பதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வியின் அடிப்படையில், ஆசிரியர் பணிக்குத் தகுதி இல்லாத காரணத்தால், அந்தத் தேர்வு நிலை தர முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: இந்தி ஆசிரியர்களும், சமஸ்கிருத ஆசிரியர்களும், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த மாநிலத்தில் இந்திக் கல்வி நிறுத்தப் பட்டதால், மற்ற துறைகளுக்குச் சென்றார்கள். அவர்கள் எல்லாம் ஆசிரியர்களாக இருக்கத் தகுதி உள்ளவர்கள்தான். ஆனால் அவர்களை ஆசிரியர்களாக இந்த அரசு வைத்துக்கொள்ள முடியாத காரணத்தால், வேறு பணிகளில் நூலகர்களாக, இளநிலை உதவியாளர்களாக, சிற்றெழுத்தர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் ‘இந்தப்பணிகளுக்கு எடுத்துக் கொள்ளப்படும்போதே அவர்கள் வாங்கிக்கொண்டிருக்கிற சம்பளத்திற்கு பாதிப்பு ஏதும் வராது என்றும், மற்ற ஆசிரியர்கள் என்னென்ன பயன்களைப் பெறுவார்களோ அவை அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப்படும் என்றும் அளிக்கப்பட்ட உறுதி மொழியின் அடிப்படையில்தான் அவர்கள் எல்லாம் வேறு பணிக்கு மாற்றப்பட்டார்கள். எனவே அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் இதை மறுபடியும் கவனித்து மறுபரிசீலனை செய்து முடிவெடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 3-வது சம்பளக் கமிஷன் முன்பாக இந்தக் கோரிக்கை வைக்கப்படலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.